# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, KARAIKUDI.
## C.C. No.100/2025 DW.1

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | சத்திய சீலன் | க-பெ/ த–பெ | தங்கபாரதி |
| ஊர்: | : | தேவகோட்டை | சமயம் | |
| வயது: | : | 53/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | ஆசிரியர் | மாவட்டம் | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 28.07.2026**

-----------------------------------------------------------------------------------------------------

**28.07.2026**

**முதல் விசாரணை**

1) எனது சக ஆசிரியர் மூலமாக Jaccie Finance – ல் உள்ள ஜோஸ் என்பவரை அறிமுகம். ஜோஸ் வட்டிக்கு பணம் கொடுத்து மாதம் தோறும் வட்டி வசூல் செய்யும் தொழில் செய்கிறார். எனது தேவைக்காக 01.06.2016 ல் ரூ. 3,00,000/– கடன் கேட்டேன் அதற்கு ரூ. 2,86,000/– கடன் கொடுத்தார் அதற்கு செக்யூரிட்டிக்காக எனது மற்றும் என் மனைவியின் கூட்டு சிட்டி யூனியன் வங்கி காசோலை, மற்றும் அசல் நில பத்திரம், கையொப்பம் இட்டு நிரப்பாத முத்திரை தாள், மற்றும் புரோநோட் பெற்றுக்கொண்டார். மாதம் 2 1/2 சதவீதம் வட்டி நேரடியாக பைனான்ஸ் நிறுவனத்திடம் 2020 வரை செலுத்தினேன், கொரோனா காலக்கட்டத்தில் G–Pay மூலம் வட்டியை 2024 வரை செலுத்தினேன். இடைப்பட்ட காலத்தில் எனக்கு மருத்துவ செலவு இருந்ததால் 4–5 முறை வட்டி தவனைகள் செலுத்த முடியவில்லை. ( **சத்தியசீலனின் SBI வங்கி 01.01.2020 முதல் 31.12.2021 வரையிலான கணக்கு பரிவர்த்தனை எ.ம.சா.ஆ.2 ஆக குறியிடப்படுகிறது. சத்தியசீலனின் SBI வங்கி 01.01.2022 முதல் 31.12.2023 வரையிலான கணக்கு பரிவர்த்தனை எ.ம.சா.ஆ.3 ஆக குறியிடப்படுகிறது. 2023 மார்ச் முதல் 2024 அக்டோபர் வரையிலான 38 G–pay screenshot எ.ம.சா.ஆ. 4 ஆக குறியிடப்படுகிறது.**

**Section 63 BSA certificate எம.சா.ஆ.5 ஆக குறியிடப்படுகிறது)** எ.ம.சா.ஆ. 2 முதல் 4 மூலமாக சுமார் 3,00,000/– Jaccie Finance ற்கு செலுத்தியுள்ளேன், ரொக்கமாக சுமார் ரூ.4,00,000/– செலுத்தியுள்ளேன். தனபால் 2024 ல் இறுதியில் Jaccie Finance ல் பணிபார்க்கும் புகார்தாரர் எனது காசோலையை தாக்கல் செய்து வழக்கு தாக்கல் செய்வேன் என்று மிரட்டினார் அதன் பின்னர் நான் Jaccie Finance ல் இருந்து நான் எந்த ஒரு பணமும் பெறவில்லை, எந்த ஒரு வரவு செலவும் வைக்கவில்லை, 2025 ல் பணம் பெற்றதாக என் மீது பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளார். நான் 2016 ல் கொடுத்து வைத்திருந்தாக காசோலையை தவறாக பயன்படுத்தி தற்போதைய வழக்கை தாக்கல் செய்துள்ளார். நான் காசோலையை நிரப்பாமல்தான் கொடுத்திருந்தேன், நான் எந்த ஒரு பணமும் 2025 ல் பெறவில்லை.

**குறுக்கு விசாரணை**

**( புகார்தாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் காலம் கேட்டுக்கொண்டதால் ஒத்தி வைக்கப்படுகிறது. )**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

VALLIMANALAN S A

Digitally signed by VALLIMANALAN S A
Date: 2026.07.28 18:56:39 -0400

நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம்,காரைக்குடி.